## சுருக்கம்

**உதவிபெறும் பள்ளிகள் – நிதியுதவியின்றி அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் அரசால் அனுமதிக்கப்படாத பணியிடங்களில் பணிபுரிந்த காலங்களை தலைமை ஆசிரியர் நியமனத்திற்குப் பணி அனுபவமாக கணக்கில் கொள்ளுதல் – ஆணை வெளியிடப் படுகிறது.**

பள்ளிக்கல்வி (பி1) துறை

அரசாணை ( நிலை) எண்.116. நாள்– 14.7.2006.

படிக்க

I) அரசாணை நிலை எண். 285 கல்வி நாள்– 12.3.91.

ii ) அரசாணை நிலை எண். 314 பள்ளிக்கல்வித்துறை நாள்– 12.11.99.

iii) தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 12180/எச்2/03 நாள்– 2.1.2004 .

iv) பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.79340/டி1 (3) /2004 நாள்– 24.3.2005.

V) தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 12180/எச்4/ 03 நாள்– 14.6.2005.

**********

ஆணை:

தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம், 1974 –இன் விதிகள் அனுபந்தம் 5(2) இல் தலைமை ஆசிரியர் நியமனத்திற்கு 5 ஆண்டு கால ஆசிரியர் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என வரையறுக்கப் பட்டுள்ளது. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மெட்ரிகுலேஷன் பள்ளியில் பணியாற்றிய பணிக் காலத்தை பணி அனுபவத்திற்குக் கணக்கில் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் பின்வருமாறு ஆணையிடப் பட்டுள்ளது.

I) 1.6.1991க்கு முன்னர் நிதியுதவி இன்றி அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் பணிபுரிந்த காலம், அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் பதவி உயர்வுக்குத் தகுதி வாய்ந்த காலமாக கணக்கில் கொள்வதற்கு மட்டும் கருதப்பட வேண்டும்.

II) அத்தகைய பணியை ஊதிய நிர்ணயத்திற்குக் கணக்கில் கொள்ளக் கூடாது , மற்றும்

III) அத்தகைய பணியை ஓய்வூதிய பலன்கள் வழங்குவதற்கும் கணக்கில் கொள்ளக் கூடாது.

3) பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், தொடக்கக் கல்வி இயக்குநர், நிதியுதவி இன்றி அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளியில் பணியாற்றிய பணிக்காலத்தைக் கணக்கில் கொண்டு 24.1.2003 முதல் தேனி மாவட்டம், கெப்புரெங்கன்பட்டி, செந்தில் நடுநிலைப்பள்ளியில் பட்டதாரி தலைமை ஆசிரியராகப் பள்ளி நிர்வாகத்தால் நேரடி நியமனம் மூலம் திரு க.ஜெயபிரகாஷ் நாராயணன் என்பவரை தலைமை ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ள நேர்வில், இத்தனியார் தலைமை ஆசிரியராக நியமனம் செய்யப்படுவதற்கு முன்னால் நிதியுதவி இன்றி தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்ட பள்ளியில் அனுமதிக்கப்படாத பணி யிடத்தில் 4.8.1996 முதல் 4.10.2002 முடிய ஆறு ஆண்டுகளும் இருமாதங்களும் பணிபுரிந்துள்ளாரென்றும், தலைமை ஆசிரியர் நியமனத்திற்கான 5 ஆண்டுகால ஆசிரியரின் பணி அனுபவம் சார்பாக இத்தனியர் 4.8.1996 முதல் 4.10.2002 முடிய பணியாற்றிய காலத்தை கணக்கில் கொள்வது தொடர்பாக, மெட்ரிகுலேசன் பள்ளியும் நிதி உதவி பெறாத பள்ளிகள் தான் என்றும் மெட்ரிகுலேசன் பள்ளியில் பணியாற்றிய பணிக்காலத்தைக் கணக்கில் கொள்வது போல், நிதி உதவி பெறாத அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் பணியாற்றிய பணிக்காலத்தையும் கணக்கில் கொள்ளலாம் என்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் சுட்டிக்காட்டி, நிதியுதவி இன்றி அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளியில் பணியாற்றிய பணிக் காலத்தைக்கணக்கில் கொண்டு 24.1.2003 முதல் தேனிமாவட்டம் கெப்புரெங்கன்பட்டி செந்தில் நடுநிலைப் பள்ளியில் பட்டதாரி தலைமை ஆசிரியராகப் பள்ளி நிர்வாகத்தால் நேரடி நியமனம் மூலம் திரு.க.ஜெயபிரகாஷ் நாராயணன் என்பவரை தலைமை ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ளதற்கு அனுமதி அளித்தல் குறித்து அரசின் தெளிவுரை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4) மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மற்றும் நிதி உதவியின்றி அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் பணிபுரிந்தததாகப் போலியான முறையில் பணி அனுபவச்சான்று பெற்று, பணி அனுபவம் பெற்றுள்ளதாக அரசுக்கு சான்றுகளைச் சமர்ப்பிக்க வாய்ப்புள்ளதால் பணி அனுபவச் சான்றுகளை உரிய முறையில் பரிசீலித்து அவற்றின் நம்பகத் தன்மையை தீர்மானிப்பது குறித்த வழிமுறைகளை வகுக்குமாறும், அதனடிப்படையில் உரிய சான்றுகள் நம்பகத்தன்மை உடையவைதானா என்பது குறித்து அரசுக்கு திட்டவட்டமான சான்றினை இயக்குநர் அளவில் அளிக்கப்பட வேண்டும் எனவும் தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக்கல்வி இயக்குநர் ஆகியோர் அரசால் அறிவுறுத்தப்பட்டனர்.

5) பார்வை நான்கு மற்றும் ஐந்தில் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோரது அறிக்கையில் , நிதியுதவியின்றி அங்கீகரிக் கப்பட்ட தனியார் பள்ளியில் அரசால் அனுமதிக்கப்படாத பணி யிடங்களில் பணிபுரிந்த காலங்களை தலைமை ஆசிரியர் பணிக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளின்பேரில் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

I. சுயநிதி பள்ளிகளில் தகுதியுள்ள ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும் எனும்நிபந்தனைகளின்பேரில் அங்கீகாரம் அளிக்கப்படுவதால் தகுதியுள்ள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட விவரம் பள்ளி நிர்வாகத்தால் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

II. அவ்வாறு அனுப்பப்பட்ட பட்டியலின்படி பணியாற்றும் ஆசிரியர்கள் விவரத்தை பள்ளியைப் பார்வையிடும்போது மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர்கள் ஒப்பு நோக்குதல் வேண்டும்.

III. மூன்று மாதங்களுக்கு (காலாண்டு அறிக்கையாக) சுயநிதி பள்ளிகளில் தகுதியுள்ள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றுவதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

IV. பணி அனுபவச் சான்றில் மேலொப்பமிடுகின்றபோது

i) ஆசிரியர் நியமன ஆணை,
ii) வருகைப்பதிவேட்டின் நகல்,
iii) கால அட்டவணை (இவ்வாசிரியருக்கான பாடவேளையின் ஒதுக்கீடு)
iv) பாடத்திட்டக் குறிப்பேடு போன்றவற்றை பள்ளியிலிருந்து பெற்று பரிசீலிக்க வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள பதிவேடுகளுடன் ஊதிய பதிவேடு மற்றும் ஆசிரியர் தகுதிக்கான சான்றிதழ்களை சரிபார்த்தபிறகு ஆய்வு அலுவலர் (DEO/ DEEO/ IMS ) சான்றிதழில் மேலொப்பமிட வேண்டும். மேற்காணும் நிபந்தனைகள் பூர்த்தி செய்திருப்பின், சுயநிதி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பணிக்காலத்தையும் தலைமை யாசிரியர் பதவிக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

V. மெட்ரிக்குலேஷன் பள்ளி / தனியார் பள்ளிகளில் பணிபுரிந்த ஆசிரியர்களின் பணிச்சான்றிதழ்களின் நம்பகத் தன்மையைத் தெளிவாகக் கவனித்து உறுதி செய்து கொள்வதுடன் இது சார்பாக திட்டவட்டமான சான்றினை அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் அளவிலேயே அளிக்கலாம் எனவும், மேலும் உதவி பெறும் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பணி நியமனத்திற்கு அரசால் அனுமதிக்கப்படாத மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பணிபுரிந்த காலங்களை கணக்கில் எடுத்துக் கொள்கின்ற நிலையில், நிதியுதவியின்றி அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளி களில் அரசால் அனுமதிக்கப்படாத பணியிடங்களில் பணிபுரிந்த காலங் களையும் தலைமைஆசிரியர் நியமனத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

6) தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக்கல்வி இயக்குநர் ஆகியோரின் அறிக்கைகளின் அடிப்படையில், இந்நேர்வினை அரசு கவனமுடன் பரிசீலித்தது. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை எண். 285 கல்வி நாள்– 12.3.1991 – இல் மெட்ரிகுலேஷன் பள்ளியில் பணியாற்றிய பணிக்காலத்தை தலைமை ஆசிரியர் நியமனத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று ஆணை வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், மேலே பத்தி 5 இல் இனங்கள் (I) முதல் (V) வரை தெரிவிக்கப் பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையிலும், பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண். 314 பள்ளிக்கல்வித்துறை நாள்–2.11.1999–இல் அதாவது மேலேபத்தி 2 இல் இனம் (i) முதல் (iii) வரை

தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையிலும், நிதியுதவியின்றி அங்கீகரிக்கப் பட்ட தனியார் பள்ளிகளில் அரசால் அனுமதிக்கப்படாத பணியிடங்களில் பணி புரிந்த காலங்களையும் தலைமை ஆசிரியர் நியமனத்திற்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று அரசு கருதி , அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தொடக்கக் கல்வி இயக்குநர்,சென்னை- 6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6
தலைமை கணக்காய்வாளர், சென்னை- 18 / 35
நகல்- மாவட்டத்தொடக்கக்கல்வி அலுவலர், தேனிமாவட்டம்,
(தொடக்கக் கல்வி இயக்குநர் வழியாக)
தனியருக்கு (தொடக்கக் கல்வி இயக்குநர் வழியாக)
பள்ளிக்கல்வித்துறை (டி) பிரிவு
அரசாணை (நிலை) என் 285 பள்ளிக்கல்வி நாள்- 12.3.1991
அரசாணை (நிலை) எண். 314 பள்ளிக்கல்வி நாள்- 12.11.1999
இருப்புக்கோப்புக்கு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//